கவனிக்க.- 2022.04.29 ஆந் திகதிய 2278 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வரத்தமானியின் பகுதி VI இல் 2022 ஆம் ஆண்டுக்கான கொழும்பு மாவட்டத்துக்குரிய நீதாசன வலயங்களின் யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம், தமிழ் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகின்றது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2278 - 2022 අප්‍රේල් මස 29 වැනි සිකුරාදා - 2022.04.29

2278 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 826 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | |


## வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2022, மே மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, மே மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

825 - B82340 - 5403 (2022/04)

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## ரிதீமாலியத்த பிரதேச சபை

*நிலையான துணை விதி*

*ரிதீமாலியத்த பிரதேச சபையால் 2022 மாச்சு மாதம் 24 ஆம் திகதிய சபைக் கூட்டத்தின் போது இலக்கம் 05.02 இன் கீழ் காட்டப்பட்டிருக்கும் தீர்மானம் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதென பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*தீர்மானம்*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநிலைச் சட்டத்தின்) சட்டத்தின் 2 ஆம் பந்தியுடன் வாசிக்கப்பட வேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி சபை (நிலையான துணை விதி) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் ஊவா மாகாண சபையின் உள்ளூராட்சி மன்ற விடயப்பொறுப்புடைய அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரப்படி 1952 ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க உள்ளூராட்சி சபை (நிலையான துணை விதி) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்ட 2022.02.17 ஆம் திகதி இலக்கம் 2267/44 இற்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நிலையான துணை விதி 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 122 ஆம் பந்தியுடன் வாசிக்கப்பட வேண்டிய அச் சட்டத்தின் 126 ஆம் பந்தியில் பிரதேச சபைக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரப்படி மேற் குறிப்பிடப்பட்ட விதத்தில் விதிகளை ரீதிமாலியத்த பிரதேச சபை அதிகாரப்பிரிவில் அமுலாக்கவும் நடைமுறைப்படுத்தவும் பிரேரிப்பதுடன் இத் தீர்மானத்தை வாத்தமானியில் அறிவிக்கப்பட்ட திகதி முதல் நடைமுறைப்படுத்தவும், ஏற்றுக்கொள்ளவும், மேற் குறிப்பிடப்பட்ட உள்ளூராட்சி சபை (நிலையான துணை விதி) சட்டத்தின் 03 ஆம் உப பிரிவின் கீழ் ரிதீமாலியத்த பிரதேச சபை தீர்மானிக்கின்றது.*

*நிஷாந்த ஜயசுந்தர,*
*தவிசாளர்,*
*ரீதிமாலியத்த பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*2022, மாச்சு 31.*

*ஊவா மாகாண கௌரவ ஆளுநரின் அறிவித்தல்*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (விளைவாந் தன்மை வாய்ந்த ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை கட்டளைச் சட்டத்தின் 123 ஆவது பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை கட்டளைச் சட்டத்தின் 122(1) ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 126(vii) (ஏ) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக ரிதீமாலியத்த பிரதேச சபையினால் தயாரிக்கப்பட்ட ரிதீமாலியத்த பிரதேச சபையின் வாகனங்களை நிறுத்தும் மற்றும் வாகனங்களை கையாளுதல் என்ற பெயரில் இங்கு பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள துணைச் சட்டத்திற்கு 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (விளைவாந் தன்மை வாய்ந்த ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை கட்டளைச் சட்டத்தின் 123 ஆவது பிரிவில் எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாக இங்கனம் அறிவிக்கிறேன்.*

*ஏ. ஜே. எம். முஸம்மில்,*
*ஊவா மாகாண ஆளுநர்.*

*ஊவா மாகாண ஆளுநர் அலுவலகம்,*
*2022, பெப்புருவரி 10.*

*ரிதீமாலியத்த பிரதேச சபை அதிகார வரம்புக்குள் வாகனங்களை நிறுத்துவது மற்றும் கையாள்வது*

**தொடர்பான துணைச் சட்டம்**

1. இந்ததுணைச் சட்டமானது ரிதீமாலியத்த பிரதேச சபை அதிகார வரம்புக்குள் உள்ள சாலைகளில் வாகனங்களை நிறுத்துதல் மற்றும் கையாள்வதை ஒழுங்குபடுத்துதல், கண்காணித்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் தொடர்பான துணைச் சட்டம் என்று அழைக்கப்படுகிறது.

2. பிரதேச சபை அதிகார வரம்புக்குள் வாகனங்களை முறையாக நிறுத்துவதையும் கையாளுவதையும் பராமரிப்பதன் மூலம் பயணிகளின் பாதுகாப்பு மற்றும் வாகன விபத்துக்களைத் தடுக்கும் முகமாக இந்த துணை சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

3. பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 122 உடன் வாசிக்கப்பட வேண்டிய 126 (vii) (ஊ) துணைப் பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி இந்த துணை சட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

4. (அ) ரிதீமாலியத்த பிரதேச சபை பகுதியில் எந்தவொரு தெரு அல்லது சாலையில் எந்தப் பகுதியிலும் -

I. வாகனம் நிறுத்துவதை தடைசெய்வது
II. கட்டுப்படுத்தல்,
III. ஒரு பக்கத்தில் மட்டும் வாகனங்களை நிறுத்த அனுமதிப்பது.
IV. ஏற்றுதல் அல்லது இறக்குதல் தடை அல்லது கட்டுப்பாடு விதித்தல்,
V. பயணிகளை இறக்குவது அல்லது ஏற்றுவதை தடைசெய்தல்
VI. பஸ் தரிப்பிடங்களை தெரிவு செய்தல்,
VII. ஒரு வழிக்கு மாத்திரம் வாகனம் செலுத்தும் வீதிகள் அல்லது சாலைகள் பெயரிட்டு பயணிக்கக்கூடிய திசையைத் தீர்மானிப்பதற்கு,

ரிதீமாலியத்த பிரதேச சபைக்கு அதிகாரம் இருக்க வேண்டும்.

(ஆ) (அ) பந்தியின் கீழ் பிரதேச சபை ஏதேனும் கட்டுப்பாடுகளை விதித்த பின்னர், அந்த கட்டுப்பாடு தொடர்பான சாலை அடையாளங்களை சம்பந்தப்பட்ட இடத்தில் அமைப்பது தவிசாளரின் கடமையாகும் அந்த கட்டுப்பாடுகள் குறித்த சாலை அடையாளங்களை மோட்டார் வாகனச் சட்டத்தின் 164 ஆவது பிரிவுடன் இணைந்து வாசிக்கக்கூடிய அச் சட்டத்தின் 237 ஆவது பிரிவின் கீழ் அமைச்சரால் செய்யப்பட்ட 1987 மாச்சு 13 ஆந் திகதியிட்ட 444/18 ஆம் இலக்க 1 ஆவது பகுதி (1) வது பத்தி அதிவிசேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட அந்த உத்தரவுகளுக்கு அமைய இருத்தலுடன், அவ் உத்தரவுகளுக்கு உடனுக்குடன் கொண்டு வரப்படும் திருத்தங்களுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

5. பிரதேச சபை பகுதிக்குள் அல்லது பிரதேச சபை பகுதி வழியாக அமைந்துள்ள எந்தவொரு பாதை அல்லது சாலை வழியாக செலுத்தப்படும் எந்தவோர் வாகன சாரதியும் 4 ஆவது துணை சட்டத்தின் (ஆ) பத்தியின் கீழ் உள்ள உத்தரவின் படி அமைக்கப்பட்ட அடையாளத்தால் குறிக்கப்பட்டுள்ள விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும்.

6. ஒவ்வொரு வாகன நிறுத்துமிடத்திலும் நிறுத்துவதற்கென வருகை தரும் வாகானம் நுழைவாயிலிலும் வெளியேறும் இடத்திலும் ஒரு வெண்மையாக்கப்பட்ட அறிவிப்பு பலகை மும்மொழியிலும் இருக்க வேண்டியதுடன், அவ்விடத்திற்குள் வாகன தரிப்புக்காக வரும் போதும், தரித்து வெளியில் செல்லும் போதும் செல்லும் திசையை எளிதாக அடையாளம் காண 20 செ.மீ. அகலத்துடன் வெள்ளை நிற கோடுடன் அம்புக்குறிகளை குறிக்க வேண்டும்.

7. ஒவ்வொரு வாகன நிறுத்துமிடத்தில் தார் அல்லது கொன்கிரீட் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் வாகன நிறுத்துமிடத்தில் பயன்படுத்துபவர்களின் பயன்பாட்டிற்காக ஆண்களுக்கும் பெண்களுக்கும் என தனித்தனி கழிப்பறைகள் கட்டப்பட்டிருக்க வேண்டும். மேலும் இப்பகுதியில் எளிதில் நீர் வழிந்து செல்வதற்கான வடிகால் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

8. ஒவ்வொரு வாகான தரிப்பிட வளாகத்திலும் சேகரிக்கப்படும் குப்பைகளை தினமும் அப்புறப்படுத்துவது மற்றும் அந்த இடத்தில் இருக்கும் கழிப்பறைகளை தினசரி அடிப்படையில் கிருமி நீக்கம் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்வதை உறுதி செய்வது தவிசாளரின் கடைமையாக இருத்தல் வேண்டும்.

9. அனைத்து வாகன நிறுத்துமிடங்களிலும் நிறுத்துமிடங்களை ஒதுக்கும்போது நுழையும் மற்றும் வெளியேறும் வாகனங்களுக்கு போதுமான அளவு பாதைகளை அமைத்திருக்க வேண்டும்.

10. வாகான நிறுத்துமிடத்துக்குள் ஒரு வாகனத்தை செலுத்தும் போதும், நிறுத்தும் போதும், அங்கு நிறுத்தப்பட்டுள்ள வேறு எந்த வாகனத்திற்கும் இடையூறு ஏற்படாதவாறு வாகனங்கள் நிறுத்த போதுமான இடவசதி வழங்கப்பட வேண்டியதுடன், மேலும் ஒவ்வொரு வாகனத்திற்கும் இடையே 10 செ.மீ. அகலம் கொண்ட வெள்ளை கோட்டினால் குறிக்கப்பட வேண்டும்.

11. வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தப்படும் ஒவ்வொரு வகையிலான வாகனத்தில் அறவிட பிரதேச சபையால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தின் அளவை நுழைவாயிலில் மும்மொழியில் காண்பிப்பது தலைவரின் கடமையாகும்.

12. சபையினால் வழங்கப்படும் அட்டவணை 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவம் மூலம் வாகன தரிப்பிடத்திற்கான பிரதேச சபையின் அனுமதிக்காக விண்ணப்பிக்க வேண்டும், அத்துடன் சபையால் தீர்மானித்த கட்டணத்தை செலுத்துவதன் மூலம் விண்ணப்பப்படிவத்தைப் பெற வேண்டும். இந்த விண்ணப்பக் கட்டணம் சபையால் அவ்வப்போது எடுக்கப்படும் முடிவுகளுக்கு அமைய திருத்தப்படலாம்.

13. 12 ஆம் சட்டப் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தை வழங்குவதில் விண்ணப்பதாரர் பின்வரும் தகுதிகளை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

I. விண்ணப்பதாரர் சபையின் அதிகார வரம்பில் நிரந்தர வதிவாளர் என்பதை உறுதிப்படுத்த வேண்டும், மேலும் மூன்று ஆண்டுகள் நிரந்தர வதிவிடத்தை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

II. ஓட்டுநர் வாகனத்தின் உரிமையாளராக இருந்தால், அவரினதும், ஓட்டுநர் ஒரு கூலி சாரதியாக இருந்தால், அவரினதும், உரிமையாளரினதும் பின்வரும் ஆவணங்களின் நகல்கள் விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் அத்துடன், அவர்களின் அமையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

- வாகன உரிமையாளரின் தேசிய அடையாள அட்டை மற்றும் செல்லுபடியாகும் சராதி அனுமதிப்பத்திரம்.
- வாகனத்தின் பதிவு சான்றிதழ்
- கூலி சாரதியின் தேசிய அடையாள அட்டையும், செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்
- வாகன காப்புறுதி சான்றிதழ்
- வருவாய் உரிமம்.

14. (அ) வாகன நிறுத்துமிடங்களில் நிறுத்தப்பட்டுள்ள வாகனங்களில் கட்டணம் வசூலிப்பதற்காக இதன் பின்னர் “ வாகன நிறுத்துமிட பொறுப்பாளர்” என்று குறிப்பிடப்படும் -

I. பிரதேச சபையில் பணியாற்றும் எந்தவொரு ஊழியரும், அல்லது

II. பிரதேச சபையால் பிரசித்த டென்டர் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அல்லது அந்த ஏலதாரரால் பரிந்துரைக்கப்பட்ட அவரது பிரதிநிதி முன் நிறுத்தப்படலாம்.

(ஆ) அப்படியானால், எந்தவொரு வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்துவதற்காக அறவிடப்படும் கட்டணம் II ஆவது துணை சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள படி பிரதேச சபையால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை விட அதிகமாக இருக்கக்கூடாது. நிறுத்தப்படும் ஒவ்வொரு வாகனத்திலும் அறவிடப்பட்ட கட்டணத் தொகை இந்த பிரிவின் இரண்டாவது அட்டவணைக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட ரசீதில் இது பதிவு செய்யப்பட்டு வாகனத்தின் ஓட்டுநருக்கு வழங்கப்பட வேண்டும்.

15. ஒவ்வொரு வாகன நிறுத்துமிட பொறுப்பாளரும் தனது பணி நியமன காலத்திற்குள் பிரதேச சபையால் நிர்ணயிக்கப்பட்டபடி வாகன நிறுத்துமிட பொறுப்பாளரை எளிதில் அடையாளம் காணக்கூடிய வகையில் ஆடை அணிந்திருப்பதை உறுதி செய்வது தவிசாளரின் கடமையாகும்.

16. (அ) 14 ஆவது துணை சட்டத்தில் (ஆ) பத்தியின் கீழ் நிறுத்த அனுமதிக்க முடிவு செய்யப்பட்டுள்ள எந்தவொரு வகை வாகனமும், வாகன நிறுத்துமிடத்திற்குள் நழையும் நேரத்தில் வாகன நிறுத்துமிடத்தின் நுழைவாயிலில் மேற்கண்ட வாகனத்தின் ஓட்டுநருக்கு இந்த பிரிவின் மூன்றாவது அட்டவணைக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட நுழைவு அனுமதியை குறிப்பிடும் நுழைவு அனுமதி அட்டையை வழங்குவது வாகன நிறுத்துமிட பொறுப்பாளரின் கடமையாக இருக்க வேண்டும்.

(ஆ) நுழைவு அனுமதிப்பத்திரம் உள்ள அனைத்து வாகனங்களும் வாகன நிறுத்துமிடத்தில் இருந்து வெளியேறுவதற்கு முன்பு -

I. பத்தி (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள அட்டையை நிறுத்துமிட பொறுப்பாளரிடம் திரும்ப ஒப்படைத்தல்.

II. II ஆவது துணைச் சட்டத்தின் குறிப்பிடப்பட்டுள்ள படி பிரதேச சபையால் நிர்ணயிக்கப்பட்ட அளவுகளுக்கு ஏற்ப நிறுத்துமிட பொறுப்பாளரிடம் பார்க்கிங் கட்டணம் செலுத்துதல் மற்றும்

III. செலுத்தப்பட்ட கட்டணத்துடன் தொடர்புடைய 14 ஆவது துணைச் சட்டத்தில் (ஆ) பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ரசீதைப் பெற்றுக்கொள்வது.

இவை வாகன ஓட்டுநரின் காரியமாக இருக்க வேண்டும்.

17. தவிசாளர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அதிகார அல்லது நிறுத்துமிட பொறுப்பாளர் அல்லது பொலிஸ் உத்தியோகத்தர் வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தப்பட்டுள்ள வாகனத்திற்கு வழங்கிய நுழைவு அனுமதியை பரிசோதிக்க கேட்கும் போது அதனை வழங்குவது வாகனத்தின் உரிமையாளர் அல்லது வாகன ஓட்டுநரின் கடமையாகும்.

18. பிரதேச சபை வரம்புக்குள் அமைக்கப்பட்டுள்ள ஒரு வாகான தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டுள்ள. -

(அ) அரசாங்க வாகானங்களுக்கு,
(ஆ) மாகாண சபை வாகானங்களுக்கு,
(இ) மாகாணத்தில் அமைந்துள்ள எந்தோர் உள்ளூராட்சி மன்றத்தின் வாகனங்களுக்கும்.

இந்த பிரிவின் துணை சட்டங்களின் விதிகள் பொருந்தாது. இருப்பினும், எந்தவொரு அரச கூட்டுத்தாபன அல்லது சட்டப்பூர்வ சபையின் எந்தவொரு வாகனத்திற்கும் இந்த பிரிவின் துணை சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த விதிமுறைகள் முறையில் பொருந்தும்.

19. வாகனம் நிறுத்துமிடத்தில் அனுமதி அட்டை இல்லாமல் நிறுத்தப்பட்டுள்ள எந்தவொரு வாகனத்தையும் வாகனம் அந் நிறுத்துமிடத்திலிருந்து அகற்றுவது தலைவர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அல்லது வாகன நிறுத்துமிடப் பொறுப்பாளரின் செயல் சட்டப்பூர்வமானதாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

20. 5 வது துணை சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், 4 ஆவது துணை சட்ட விதிகளின் கீழ் பிரதேச சபையால் நிர்ணயிக்கப்பட்டு ஏதேனும் ஏற்றப்பட்ட சாலை அடையாளத்தால் நிர்ணயிக்கப்பட்ட வரம்புகள் -

(அ) அந்தத் தெருவில் அல்லது சாலையின் எந்தப் பகுதியிலும் அல்லது பிரதேச சபை பகுதியில் வேறு எந்த தெரு அல்லது சாலையின் அருகிலும் உள்ள எந்த கட்டிடமும் அல்லது அருகிலுள்ள தீ அல்லது வேறு ஏதேனும் பேரழிவை கட்டுப்படுத்தும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் பிரதேச சபை தீயணைப்பு வண்டி அல்லது வேறு எந்த வாகனத்திற்கும்,

(ஆ) அந்தச் வீதியின் அல்லது சாலையின் எந்தப் பகுதியிலோ அல்லது பிரதேச சபையின் பகுதியிலோ வேறு எந்த வீதி அல்லது சாலையின் போக்குவரத்து நெரிசல்களைத் தவிர்க்க அல்லது பிரதேச சபை பகுதிக்குள் எதிர்பாராத வேறு எந்த சூழ்நிலையையும் கட்டுப்படுத்த ஒரு காவற்துறை அதிகாரி நேரத்திற்கு ஏற்றவாறு பிறப்பித்த உத்தரவின் பிரகாரம் செயற்பட,

குறிப்பிடப்பட்ட 5 ஆவது துணை சட்டத்தின் விதிகளை மீறுவதாக கருதக்கூடாது.

21. (அ) எந்தவொரு நபரையும் வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்த அனுமதிக்க பிரதேச சபையால் நிர்ணயிக்கப்பட்ட ஒரு வகை வாகனம் வேறு எந்த வாகனம் அல்லது மோட்டார் வாகனம் அல்லாத வேறு ஏதேனும் வாகனத்தை நிறுத்துமிடத்தில் நிறுத்துதல் அல்லது நிறுத்துமிடத்திற்கு நழைய அல்லது அவ்வாறு செய்வதோ கூடாது.

(ஆ) வாகனம் நிறுத்துமிடத்தில் நிறுத்தப்பட்டுள்ள வாகனத்தை அகற்றுவதற்கு முடியாத விதத்தில் செயலிழந்த சந்தர்ப்பத்தில் அந்த வாகனத்தை இழுக்க வேறு எந்த வாகனமும் வாகன நிறுத்துமிடத்திற்குள் வரும் சமயம் அந்த வாகனம் நுழைய போதுமான இடம் இருந்தால் ஏனைய வாகனங்களுக்கு ஏதேனும் தடைகள் அல்லது சேதத்தை ஏற்படுத்தும் வகையில் இழுக்க கூடாது.

22. எவரேனும் வாகன நிறுத்துமிடத்திற்குள் -

(அ) வாகானத்தை கழுவுதல் அல்லது அதற்கு ஏற்பாடு செய்தல் ;

(ஆ) ஒரு வாகனத்தை அகற்றும் நோக்கத்திற்காக வாகனத்தை புதுப்பிக்க அத்தியாவசிய பழுதுபார்ப்பு அல்லது சக்கர மாற்று வேலை இல்லாத வேறு எந்த பழுதுபார்ப்புக்களையும் செய்தல் ;

(இ) பந்தி (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு பழுதுபார்ப்பையும் சூழ்நிலைகளை கணக்கில் எடுத்துக் கொள்ளும் போது தவிர, தேவையற்ற அல்லது கவனத்தை சிதறடிக்கும் எந்தவொரு சத்தத்தையும் உருவாக்குவது ;

(ஈ) அந்த வாகன நிறுத்துமிட பொறுப்பாளரின் அனுமதியின்றி வாகனம் நிறுத்தப்பட்டிருந்த இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அதே வாகனத்தை கொண்டு நிறுத்துவது ;

(உ) மேற்கண்ட வாகன நிறுத்துமிட பாதைகள் அல்லது நுழைவு மற்றும் வெளியேறும் வாயில்களைத் தடுக்க வாகனம் நிறுத்தப்பட்டிருப்பது ;

(ஊ) விபத்து தடுப்பு அல்லது வாகனம் அல்லது அதனுள் இருப்பவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வது அல்லது அவ்வாறான நோக்கங்களுக்காக தவிர ஏதேனும் வாகனத்தில் பொருத்தப்பட்ட எச்சரிக்கை உபகரணங்கள் சத்தமிட செய்வது ;

(எ) மேற்கூறிய வாகன நிறுத்துமிடங்களில் அல்லது நிறுத்துமிடங்களுக்குள் நுழையும் அல்லது வெளியேறும் எந்தவொரு வாகனமும் ஒலி எழுப்புதல் ;

(ஏ) மது அருந்துதல், வெற்றிலை துப்புவது, ஆபாசமான மொழியைப் பயன்படுத்துதல், கலவரம் அல்லது ஒழுக்கக்கேடான செயல்களில் ஈடுபடுதல் கூடாது.

23. வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தப்பட்டுள்ள எந்தவொரு வாகனத்தின் பாதுகாப்பிற்கான பொறுப்பு அந்த வாகனத்தை நிறுத்திய நபர் பொறுப்பேற்க வேண்டும் என்பதைத் தவிர எந்தவொரு வாகனத்திற்கும் ஏதேனும் சேதம் ஏற்பட்டால், எந்தவொரு இழப்புக்கும் அல்லது சேதத்திற்கும் பிரதேச சபை அல்லது அதன் தலைவர் அல்லது நிறுத்தமிட பொறுப்பாளர் பொறுப்பேற்க கூடாது.

24. 6 ஆவது துணைச் சட்டத்தின் விதிகளின் படி எந்த நேரத்திலும் எந்தவொரு வாகனமும் நிறுத்துமிடத்தில் சுட்டிக்காட்டப்பட்ட திசைக்கு மாறான திசையில் இயக்கப்படக் கூடாது.

25. எந்தவொரு வாகன நிறுத்துமிடத்தில் அமைந்துள்ள ஏதேனும் கட்டுமானத்தை அல்லது உபகரணங்களை சேதப்படுத்தவோ சிதைக்கவோ கூடாது.

26. பொது வாகன நிறுத்துமிடம் அல்லது கூலி வாகான நிறுத்துமிடத்தில் நுழைவதை அல்லது வெளியேறுவதைத் தடுக்கும் விதத்தில் எவரும் வாகனம் நிறுத்தக் கூடாது.

27. எந்தவொரு வாகன நிறுத்துமிடத்திலும் வாகனம் நிறுத்துவதற்கு பிரதேச சபையால் முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட விதத்தில் கட்டணம் வசூலிக்கப்படலாம்.

28\. (அ) பிரதேச சபையின் பகுதிக்குள் இதன்பின் " வாகன தரிப்பிடம் " என்று அழைக்கப்படும் மோட்டார் வாகனம் நிறுத்தும் காரியத்திற்காக -

I. பிரதேச சபைக்கு சொந்தமான எந்த நிலமும், அல்லது
II. ஏதேனும் அதிகாரத்துடனும் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் படி அவ் அதிகாரத்துக்கு சொந்தமான எந்தவொரு நிலமும், அல்லது

ஒதுக்கீடு செய்ய பிரதேச சபைக்கு அதிகாரம் இருக்க வேண்டும்.

(ஆ) ஒரு குறிப்பிட்ட வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தக்கூடிய வாகனங்களின் வகை மற்றும் ஒரே நேரத்தில் நிறுத்தக்கூடிய அதிகபட்ச வாகனங்களின் எண்ணிக்கையை பிரதேச சபை அவ்வப்போது தீர்மானிக்கலாம்.

29\. ஒவ்வொரு வாகன நிறுத்துமிடத்திலும் நுழைவதற்கு குறைந்தபட்சம் ஒரு கதவும், வெளியேற ஒரு கதவும் என இரு கதவுகள் இருக்க வேண்டும். இருப்பினும், வாகன நிறுத்துமிடத்திற்குள் ஒரு தனி திசை திருப்பல் பிரிவு இருந்தால், ஒரே நேரத்தில் இரண்டு வாகனங்கள் இருபுறமும் பயணிக்க அனுமதிக்கும் இரட்டை வண்டிப்பாதை மற்றும் வாசல் பாதை இருந்தால், வாகனங்கள் நுழையவும், வெளியேறவும் ஒரே ஒரு நுழைவாயில் மட்டுமே இருக்கலாம்.

30\. இந்த சட்டத்தில் உள்ள ஒன்று அல்லது அதக்கு மேற்பட்ட அல்லது அனைத்து விதிமுறைகளையும் மீறுவது குற்றமாகும்.

31\. இந்த துணை சட்டத்தை மீறும் பட்சத்தில் தகுந்த அதிகாரமுள்ள நீதி மன்றத்தால் குற்றத்திற்கு குற்றவாளியன பின்னர் அக் குற்றம் தொடர்பாக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் துணைப்பிரிவு 122(2) இல் குறிப்பிடப்பட்டுள்ள அபராத்திற்கு அவர் பொறுப்பேற்க வேண்டும். மேற்கூறிய முறையில் அபராதம் விதிக்கப்பட்ட ஒரு நபர், அத்தகைய விதிமீறல் அல்லது மீறல்களைத் தொடர்ந்து செய்தால், மேற்கூறிய பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கூடுதல் அபராதத்திற்கு பொறுப்பேற்க வேண்டும்.

- "தவிசாளர் " என்பது தற்போது ரிதீமாலியத்த பிரதேச சபையின் தவிசாளராக இருப்பவர் என்று பொருள்.
- "பிரதேச சபை" என்றால் ரிதீமாலியத்த பிரதேச சபை என்று பொருள்.
- "செயலாளர் " என்பது ரிதீமாலியத்த பிரதேச சபையின் செயலாளர் பதவியை வகிப்பவர் என்று பொருள்.
- "சாலை" என்பது பிரதேச சபைக்கு சொந்தமான எந்தவொரு சாலை, பாதை, நெடுஞ்சாலை, குறுக்குத் தெரு இருவழி, படிக்கட்டு, கம்பம் அல்லது பயணிகள் பாலம் என்று கருதுவதுடன், பிரதேச சபைக்கு சொந்தமான எந்தவொரு சாலைது பாதை, நெடுஞ்சாலை, குறுக்குத் தெரு, இருவழி, படிக்கட்டு சம்பந்தமாக ஒரு படிக்கட்டில் ஏற்பப்பட்ட அல்லது நிறுவப்பட்ட எந்த தூர குறிப்பானும்,
- "வாகனம்" என்பது மோட்டார் வாகனச் சட்டத்தில் எந்தவொரு மோட்டார் வாகனத்திற்கும் கொடுக்கப்பட்ட வரையறைக்கு இணங்க எந்தவொரு மோட்டார் வாகனம் என்றும் பொருள்படும்.

**முதல் அட்டவணை**

12 ஆவது துணைச் சட்டம்
வாகன தரிப்பிட அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம்

01.

| | | |
|---|---|---|
| I. | விண்ணப்பதாரியின் பெயர் | : ........................................................................................................ |
| II. | நிரந்தர வதிவிட முகவரி | : ........................................................................................................ |
| III. | மதிப்பீட்டு எண் | : ........................................................................................................ |
| IV. | நிரந்தர வதிவிடத்திற்கான உள்ளூராட்சி நிறுவனம் | : ........................................................................................................ |
| V. | தேசிய ஆளடையாள அட்டை இல. | : ........................................................................................................ |

02. I. வாகானத்தின் வகை : ..........................................................................................................
II. வாகன பதிவு எண் : ..........................................................................................................
III. சாரதி உரிமையாளரா அல்லது கூலி சாரதியா : ..........................................................................................................

(அ) உரிமையாளர் என்றால் செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திர இலக்கம் : ..........................................................

(ஆ) ஒரு கூலி சாரதி என்றால்,

(i) சாரதியின் பெயர் : ..........................................................................................................
(ii) நிரந்திர முகவரி : ..........................................................................................................
(iii) தேசிய ஆளடையாள அட்டை இல. : ..........................................................................................................
(iv) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திர இல. : ..........................................................................................................

03. உரிமம் விண்ணப்பிக்கும் தரிப்பிடம் : ..........................................................................................................................................

04. உரிமத்திற்கு விண்ணப்பிக்கும் காலம் : ஒரு மாதம் /03 மாதங்கள் /ஒரு வருடம்
மேற்கூறிய தகவல்கள் உண்மையானவை எனவும், ஒரு சந்தர்ப்பத்தில் இவை தவறானவை எனக் கண்டறியப்பட்டால் , எனது வாகன தரிப்பிட உரிமம் முன் அறிவிப்பின்றி இரத்து செய்யப்பட வேண்டும் என்று பிரதேச சபையால் விதிக்கப்பட்ட பார்க்கிங் தொடர்பான சட்டங்களின் விதிமுறைகளுக்கு இணங்க ஒப்புக்கொள்கிறேன்.

திகதி : ................................................ ............................................
கையொப்பம்

திரு./திருமதி ..........................................................................................
............................................................ க்கு இலக்க ............................
............. வாகனத்தை எண் ................................................ வாகன
நிறுத்துமிடத்தில் நிறுத்த அனுமதி ..................................................
காலத்திற்கு வழங்க பரிந்துரைக்கிறேன். திகதி : ..........................

**இரண்டாவது அட்டவணை**

துணைச் சட்டங்களின் பிரிவு 14 இன் (ஆ) பத்தி

| | | |
|---|---|---|
| வாகன எண் | : | ........................................................................................ |
| வாகன வகை | : | ........................................................................................ |
| வசூலித்த கட்டணம் | : | ........................................................................................ |
| செல்லுப்படியாகும் காலம் | : | ........................................................................................ |
| வழங்கப்பட்ட திகதி | : | ........................................................................................ |

..................................................................
வழங்கும் அதிகாரியின்
பெயரும் கையொப்பமும்.

**துணைச் சட்டங்களின் பிரிவு 16 இன் (அ) பத்தி மூன்றாவது அட்டவணை**

*ரசீது எண் :*

*எண்*/No.

Receipts No. :

*நிறுத்துமிட அனுமதிப்பத்திரம்*

| | |
|---|---|
| *பெயர்* | :...................................................................................... |
| *அடையாள எண்* | :...................................................................................... |
| *கட்டணம்* | :...................................................................................... |
| *நிறுத்துமிடம்* | :...................................................................................... |
| *செல்லுபடியாகும் காலம்* | :...................................................................................... |

*திகதி* :....................................................

.....................................................

*தவிசாளர்*/

*ரிதீமாலியத்த பிரதேச சபை*

*இது 13 செ.மீ. விட்டம் கொண்ட வட்டம்.*

*பின்னணி இளம் மெரூன் நிறம்* (light marron colour ) *கொண்ட*

*பிரதேச சபை என்ற பெயர்*

water mark *என தயாரிக்கப்பட்ட ஒரு ஸ்டிக்கர் அல்லது அனுமதிப்பத்திரம்.*

*04-727*

## அக்குறணை பிரதேச சபை

மதிப்பீட்டு வரி விதித்தல் - 2022

அக்குறணை பிரதேச சபை 2020.12.08 ஆந் திகதி நடாத்திய அதன் பொதுக் சபைக் கூட்டத்தில் பின்வரும் இ:5 இலக்க முன்மொழிவு நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் பொது மக்களுக்கு அறியத்தரப்படுகின்றது.

குறித்த பொதுச் சபையின் நிறைவேற்றத்துக்கென மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் வியடப் பொறுப்பு அமைச்சரது அங்கீகாரம் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் கிடைக்கப்பட்டுள்ளதுடன், 2022 ஆம் ஆண்டுக்கென விதிக்கப்படும் மேற்குறித்த மதிப்பீட்டு வரியை மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 ஆகிய திகதிகளுடன் முடிவடையும் ஒவ்வொரு காலாண்டுக்குள் சமமான நான்கு தவணைகளில் பிரதேச சபை அலுவலகத்தில் செலுத்துதல் வேண்டுமென மேலும் அறிவிக்கப்படுகின்றது.

2022 ஆம் ஆண்டிற்குரிய மதிப்பீட்டு வரி முழுவதையும் 2022 ஆம் ஆண்டு மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் பிரதேச சபை அலுவலகத்தில் செலுத்தினால் முழுப் பெறுமதியின் பத்து சதவீதம் (10%) கழிவாகவும், ஒவ்வொரு காலண்டுக்கும் உரிய மதிப்பீட்டு வரியை ஒவ்வொரு காலாண்டின் முதலாவது மாதம் முடிவடைய முன்னர் பிரதேச சபை அலுவலகத்தில் செலுத்தினால் ஐந்து சதவீதம் (5%) கழிவாகவும் வழங்கப்படும்.

ஐ. எம். இஸ்திஹார்,
தவிசாளர்,
அக்குறணை பிரதேச சபை.
அலவத்துகொட.

### அட்டவணை - II

| தொடர் இல. | பாதையின் பெயர் | நூற்று வீதம் |
|---|---|---|
| 1. | துனுவில வீதி | 8 |
| 2. | தெமட்டகஸ்தன்ன வீதி | 8 |
| 3. | உக்கல வீதி | 8 |
| 4. | வராகஸ்ஹின்ன வீதி | 8 |
| 5. | கஸாவத்த வீதி | 8 |
| 6. | தொடங்கொல்ல வீதி | 8 |
| 7. | பெரிய பள்ளி வீதி | 8 |
| 8. | நீரெல்ல வீதி | 8 |
| 9. | ஹிங்குறுமுதுன வீதி | 8 |
| 10. | குருகொட வீதி | 8 |
| 11. | சுலைமான் வீதி | 8 |
| 12. | பங்கொள்ளாமட வீதி | 8 |
| 13. | மல்வானஹின்ன வீதி | 8 |
| 14. | மாத்தளை வீதி (பலகடுவை) | 10 |
| 15. | சமாதி மாவத்த | 8 |
| 16. | அங்கும்புர வீதி | 8 |

04-782

**இபலோகம பிரதேச சபை**

*மஹரா இலுப்பள்ளம கேட்போர் கூடத்தினை நிஹால் திலகவர்தன ஞாபகார்த்த கேட்போர் கூடம் எனப் பெயரிடுதல்*

*இபலோகம பிரதேச சபைக்குச் சொந்தமான மஹாஇலுப்பள்ளம கேட்போர் கூடத்தினை நிஹால் திலகவர்தன ஞாபகார்த்த கேட்போர் கூடம் எனப் பெயரிடுதல் பொருத்தம் என 2022, சனவரி மாதம் 26 ஆந் திகதி நடந்த பொதுக் குழுக் கூட்டத் தீரமானம் இல. 501 இற்கு ஏற்ப இபலோகம பிரதேச சபை முடிவு செய்துள்ளது.*

*அது சம்பந்தமாக ஏதேனும் ஆட்சேபணைகள் இருப்பின் 2022.05.13 ஆந் திகதிக்கு முன்னதாக முன்வைக்குமாறு வினயமாக தெரிவித்துக் கொள்கிறேன்.*

*ஹேமன்த ரம்வத்த,*
*தலைவர்,*
*இபலோகம பிரதேச சபை,*
*இபலோகம.*

*04-927*

---

**உக்குவளை பிரதேச சபை**

*ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் (272) ஆவது அதிகாரம்*

*இங்கு கீழே அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் 2022 ஆவது வருடத்தில் மாட்டிறைச்சி விற்பனை நிலையத்தை நடாத்திச் செல்வதற்கான அனுமதிப்பத்திரத்தை வழங்குமாறு விண்ணப்பித்துள்ளமையினால், அதற்கமையக் குறித்த நபருக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதை எதிர்க்கும் உக்குவளை பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் வசிக்கும் எவரேனும் உரிய நியாயமான காரணங்களைக் குறிப்பிட்டு, அதனை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 14 நாட்களுக்குள் இரு பிரதிகளில் பதிவுத் தபாலில் எனக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*டி. டப்ளியூ. எம். சேத்தியரத்ன,*
*தவிசாளர்,*
*உக்குவளை பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*உக்குவளை.*
*2022 ஏப்பிறல் 07.*

**அட்டவணை**

| *விண்ணப்பிப்பவர் பெயர்* | *வர்த்தகத்தின் தன்மை* | *வர்த்தகம் நடாத்தப்படுமிடம்* |
|---|---|---|
| *ஜே. எம். ஜெஸ்மீர், 241/A, மாபேரிய, உக்குவளை.* | *மாட்டிறைச்சி விற்பனை நிலையம் நடாத்திச் செல்லுதல்.* | *227/C, எல்கடுவ வீதி, உக்குவளை.* |

*04-989*

## வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை

*வியாபார உரிமக் கட்டணங்கள் - 2022*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 147, 148, 149, 150, 152(1), 109 (ஈ), 127 ஆம் பிரிவுகளின் பிரகாரமும் வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபையின் VCKPS/ 2021/ 11/ 1 ஆம் இலக்க 2021.11.09 ஆந் திகதிய சபைத் தீர்மானத்தின் பிரகாரமும் 2022 ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் கீழே குறிப்பிட்ட அட்டவணைகளில் தரப்பட்டுள்ள வியாபாரங்களிலிருந்து உரிமக்கட்டணங்களும் அல்லது வரியும் மற்றும் வருடாந்த வரியும் விதிக்கப்படும் என்பது அறியத்தரப்படுகின்றது.*

*2022 ஆம் ஆண்டிற்குரிய வியாபார உரிமக்கட்டணங்களும் வரிகளும் 2022.01.01 ஆந் திகதி தொடக்கம் வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் செலுத்தப்படல் வேண்டும்.*

*சுப்பையா ஜெகதீஸ்வரன்,*
*கௌரவ தவிசாளர்,*
*வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*வெங்கலச்செட்டிகுளம்.*

**அட்டவணை 01**

| தொ. இல. | வியாபாரத்தின் தன்மை | உரிமக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| 01. | தேநீர்க்கடை | 500.00 |
| 02. | தேநீரும் சாப்பாட்டுக் கடையும் | 1,250.00 |
| 03. | ஒரு சாதாரண சாப்பாட்டுக்கடை | 600.00 |
| 04. | பேக்கரி | 1,750.00 |
| 05. | முடி வெட்டும் நிலையம் | 1,500.00 |
| 06. | சலவைக் கடை | 400.00 |
| 07. | மினி சினிமா காட்டும் இடம் | 1,000.00 |
| 08. | சீமெந்து பொருட்களை விற்பனை | 1,750.00 |
| 09. | கட்டடப் பொருட்கள் விற்பனை செய்தல் அல்லது வைத்திருத்தல் | 2,000.00 |
| 10. | இரும்புப் பொருட்கள் விற்பனை செய்தல் அல்லது வைத்திருத்தல் | 2,250.00 |
| 11. | 25 பொதிக்கு மேல் சீமெந்து விற்பனை | 2,200.00 |
| 12. | தச்சுத் தொழிற்சாலை (மனித வளம்) | 2,500.00 |
| 13. | மரம் அறுக்கும் ஆலை (இயந்திரம் மூலம்) | 3,000.00 |
| 14. | ஐஸ்கட்டி தயாரிக்கும் இடம் அல்லது விற்பனை | 1,100.00 |
| 15. | பாதணிகள் விற்பனை | 1,500.00 |
| 16. | ஐஸ்கிறீம் உற்பத்தி | 2,100.00 |
| 17. | ஐஸ்கிறீம், குளிர்பானம் விற்பனை | 1,250.00 |
| 18. | இனிப்பு ரொபி விற்பனை | 400.00 |
| 19. | மரக்கறிக்கடை | 1,200.00 |
| 20. | பால் சேகரித்தலும் விற்பனையும் | 3,000.00 |
| 21. | மொத்த வியாபாரத்திற்காக 10 அந்தர் அல்லது அதற்கு மேல் மா, சீனி அரிசி உப்பு வைத்திருத்தல் | 3,000.00 |
| 22. | பலசரக்கு கடை | 1,650.00 |
| 23. | அரிசி விற்பனை | 1,200.00 |
| 24. | சாராயம் அல்லது பிற நாட்டு மதுபானசாலை அல்லது விற்பனை நிலையம் | 3,000.00 |
| 25. | கள் சேகரிக்கும் அல்லது விற்பனை செய்யும் இடம் | 3,000.00 |
| 26. | சைக்கிள் திருத்துமிடம் | 500.00 |
| 27. | மோட்டார் சைக்கிள் திருத்துமிடம் | 2,250.00 |
| 28. | மோட்டார் சைக்கிள் விற்பனை | 2,000.00 |
| 29. | காய்ச்சி ஒட்டும் இடம் | 2,000.00 |
| 30. | மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் விற்பனை | 2,250.00 |

**அட்டவணை 01** *(தொடர்ச்சி)*

| *தொ. இல.* | *வியாபாரத்தின் தன்மை* | *உரிமக் கட்டணம் (ரூபா)* |
|---|---|---|
| 31. | சைக்கிள் உதிரிப்பாகங்கள் விற்பனை | 1,000.00 |
| 32. | மின்சார உபகரணங்கள், மின் விசிறிகள், மோட்டார்கள் திருத்துதல் | 1,250.00 |
| 33. | தொலைக்காட்சி வானொலி திருத்துமிடம் | 1,200.00 |
| 34. | மின்சார பொருட்கள் விற்பனை | 1,500.00 |
| 35. | மேலைத்தேய தனியார் வைத்தியசாலை | 2,000.00 |
| 36. | மேலைத்தேய மருந்து வகைகளை வைத்திருத்தல், விற்பனை | 2,000.00 |
| 37. | பிளாஸ்றிக் பொருட்கள் விற்பனை | 1,500.00 |
| 38. | பெயின்ட், வாணிஸ் பூச்சுக்களை விற்பனை | 1,500.00 |
| 39. | நெல் குத்துதல், அரிசி மா அரைக்கும் ஆலை | 2,000.00 |
| 40. | மிளகாய் கோப்பி அரைக்கும் ஆலை | 1,500.00 |
| 41. | புகைப்படக் கலையகம் | 1,500.00 |
| 42. | தொலைக்காட்சி சினிமா கசற்றுக்கள், இறுவட்டுக்கள் விற்பனை அல்லது வாடகைக்கு விடுதல் | 1,500.00 |
| 43. | போட்டோ பிரதிக் கடை | 1,000.00 |
| 44. | விசேட வைபவங்களுக்கான பொருட்களை வாடகைக்கு விடுதல் | 2,500.00 |
| 45. | வியாபார நோக்கிலான தொலைத்தொடர்பு பெக்ஸ் சேவை | 1,000.00 |
| 46. | அரிசி ஆலை கோட்டா மில் | 3,000.00 |
| 47. | கல்வி நிலையம் | 1,000.00 |
| 48. | வங்கி வர்த்தகம் | 3,000.00 |
| 49. | பலநோக்கு கூட்டுறவு சங்கக் கிளைகள் | 1,500.00 |
| 50. | பொது மண்டபம் வைத்திருத்தல், வாடகைக்கு விடுதல் | 2,500.00 |
| 51. | புடவை விற்பனை | 2,000.00 |
| 52. | பசளைக் கடை, விவசாய உரங்கள் விற்பனை | 2,000.00 |
| 53. | நகையகம் | 3,000.00 |
| 54. | தையல் நிலையம் | 1,500.00 |
| 55. | எரிவாயு நிலையம் | 1,000.00 |
| 56. | செங்கல் தயாரிக்கும் இடம் | 1,500.00 |
| 57. | மாட்டுப்பட்டி வைத்திருத்தல் (10 மாடுகளுக்கு குறைவாக) | 500.00 |
| 58. | மாட்டுப்பட்டி வைத்திருத்தல் (10 மாடுகளுக்கு அதிகமாக) | 1,000.00 |
| 59. | பப்படம் தயாரிக்குமிடம் | 1,000.00 |
| 60. | தொலைத்தொடர்பு கோபுரம் | 3,000.00 |
| 61. | கருங்கல் ஆலை | 3,000.00 |
| 62. | கிரவல் குவாரி | 3,000.00 |
| 63. | புத்தக சாலைகள் | 1,000.00 |
| 64. | வாகனத்தில் பொருட்களைக் கொண்டு சென்று விற்றல் | 3,000.00 |
| 65. | கோழிக்கடை | 3,000.00 |
| 66. | பயிற்சிக்கூடங்கள் | 1,500.00 |
| 67. | அங்காடி வியாபாரம் | 1,500.00 |
| 68. | கோழிப்பண்ணை வைத்திருத்தல் (50 கோழிகளுக்கு குறைவாக) | 1,000.00 |
| 69. | கோழிப்பண்ணை வைத்திருத்தல் (50 கோழிகளுக்கு அதிகமாக) | 2,000.00 |
| 70. | கடிகார விற்பனை, திருத்தம் செய்தல் | 1,500.00 |
| 71. | பூ மரங்கள், மரக்கன்றுகள் விற்பனை செய்தல் | 1,500.00 |
| 72. | கதிரைகள், பந்தல் சேவை | 2,000.00 |
| 73. | கண்ணாடி பொருத்தும் நிலையம் | 1,500.00 |
| 74. | ஒலிபெருக்கி வாடகைக்கு விடுதல் | 1,000.00 |
| 75. | கருங்கற்கள் களஞ்சியப்படுத்தல், விற்பனை | 3,000.00 |
| 76. | வாகனங்களை சேவிஸ் செய்யும் நிலையங்கள் | 3,000.00 |
| 77. | எரிபொருள் நிரப்பு நிலையம் | 3,000.00 |

**அட்டவணை 01 (*தொடர்ச்சி*)**

| தொ. இல. | வியாபாரத்தின் தன்மை | உரிமக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| 78. | சிறு கைத்தொழில் உற்பத்தி | 1,000.00 |
| 79. | சிறிய பெட்டிக்கடை | 750.00 |
| 80. | சிறிய பலசரக்குக் கடை | 1,200.00 |
| 81. | சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விற்பனை (சிறியது) | 1,500.00 |
| 82. | சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விற்பனை (பெரியது) | 2,750.00 |
| 83. | பழ வியாபாரம் | 1,000.00 |
| 84. | அழகுசாதன பொருட்கள் விற்பனை | 1,500.00 |
| 85. | மரத் தளபாடங்கள் விற்பனை | 2,000.00 |
| 86. | அழகு நிலையம் | 2,000.00 |
| 87. | விதை தானியம், மரக்கன்றுகள் விற்பனை | 1,000.00 |
| 88. | விலங்கு தீவனம், மருந்து வகைகள் விற்பனை | 1,500.00 |
| 89. | வடை, கடலை வண்டி | 1,000.00 |
| 90. | ஒப்பந்த வேலைகள் | 3,000.00 |
| 91. | சோதிட நிலையம் | 1,000.00 |
| 92. | செபமாலைக் கடை | 1,000.00 |
| 93. | கால்நடை பண்ணைகள் | 3,000.00 |
| 94. | போக்குவரத்து சேவைகள் | 3,000.00 |
| 95. | காணி, கட்டடங்கள் வாங்கி விற்றல் | 3,000.00 |
| 96. | அச்சகம் | 1,700.00 |
| 97. | தனியார் கம்பனிகள் | 3,000.00 |
| 98. | வியாபாரப் பொருட்கள் விற்பனை முகவர்கள் (வாகனங்கள்) | 3,000.00 |
| 99. | அழகு சிகிச்சை நிலையம் | 1,500.00 |
| 100. | நகை அடகு வைக்குமிடம் | 3,000.00 |
| 101. | சூரியக்கல மின் உற்பத்தி | 3,000.00 |

**அட்டவணை 02 - ஏனைய அறவீடுகள்**

| தொ. இல. | அறவீட்டின் தன்மை | கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| **அட்டைகள், படிவங்கள்** | | |
| 01. | மாட்டுத் துண்டுக்குரிய கட்டணம் (01 மாட்டிற்கு) | 50.00 |
| 02. | துவிச்சக்கர வண்டிக்குரிய இலக்கத் தகடு (01) | 05.00 |
| 03. | துவிச்சக்கர வண்டி இலக்கத்துக்குரிய படிவம் (01) | 20.00 |
| 04. | மருத்துவ அட்டை, படிவம் (01 நபருக்கு) | 30.00 |
| 05. | மருத்துவ அட்டை, வைப்பு (01 நபருக்கு) | 250.00 |
| 06. | வியாபார உத்தரவுப் பத்திர படிவ விற்பனை | 50.00 |
| **விளம்பரம்** | | |
| 01. | விளம்பர பலகைகளுக்கான கட்டணம் (01 சதுர அடி) | 100.00 |
| 02. | விளம்பரக் காட்சிப்படுத்தல்கள் (01 நாள்) | 1000.00 |

**அட்டவணை 02 - ஏனைய அறவீடுகள்** *(தொடர்ச்சி)*

| *தொ. இல.* | *அறவீட்டின் தன்மை* | *கட்டணம் (ரூபா)* |
|---|---|---|

**மக்கி, கிரவல், கருங்கல் அகழ்தலும் கொண்டு செல்லுதலும்**

| | | |
|---|---|---|
| 01. | பரிசோதனைக் கட்டணம் (01 கிலோ மீற்றருக்கு) | 50.00 |
| 02. | மக்கி மண் அகழ்தலும் கொண்டு செல்லலும் (01 கியூப்பிற்கு) | 100.00 |
| 03. | கருங்கல், கிரவல் கொண்டு செல்லல் (01 கியூப்பிற்கு) | 67.50 |
| 04. | கிரவல் அகழ்தலும் கொண்டு செல்லலும் பிரதேச சபைக்குச் சொந்தமான குவாரியிலிருந்து (01 கியூப்பிற்கு) | 250.00 |

**கட்டடம் கட்டுவதற்குரிய அனுமதி**

| | | |
|---|---|---|
| 01 | கட்டடம் கட்டுவதற்குரிய அனுமதி விண்ணப்பப்படிவம் - அ (ஏ) | 150.00 |
| 02 | கட்டடம் கட்டுவதற்குரிய அனுமதி விண்ணப்பப்படிவம் - ஆ (பி) | 150.00 |
| 03 | குடிபுகு சான்றிதழ் விண்ணப்பப்படிவம் | 200.00 |
| 04 | குடிபுகு சான்றிதழ் | 3,000.00 |
| 05 | எல்லைக்கோட்டு சான்றிதழ் | 600.00 |

**ஏனையவை**

| | | |
|---|---|---|
| 01 | குழாய்க்கிணறு பராமரிப்புக் கட்டணம் (01 வருடத்திற்கு) | 1,500.00 |
| 02 | கல்லாறு அந்தியேட்டி மடக் கட்டணம் (01 நிகழ்விற்கு) | 1,500.00 |
| 03 | விளையாட்டு மைதானக் கட்டணம் (01 நாளுக்கு) | 2,000.00 |
| 04 | வியாபாரப் பெயர்ப் பதிவுக் கட்டணம் | 1,000.00 |
| 05 | விசேட தேவைகளுக்காக மாடு அறுத்தல் கட்டணம் (மாடு ஒன்றிற்கு) | 1,000.00 |
| 06 | வியாபார நிலையங்களுக்கான குப்பையகற்றல் கட்டணம் (01 மாதத்திற்கு) | 50.00 |
| 07 | கடல் மீன் வியாபாரம் (01 கிலோவிற்கு) | 15.00 |
| 08 | குளத்து மீன் வியாபாரம் (1 கிலோவிற்கு) | 10.00 |

**அட்டவணை 03**

**1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 66 ஆம் பிரிவுக்கு உட்பட்ட வகையில் கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்தல் தொடர்பான கட்டண அறவீடுகள்**

| *தொ. இல.* | *அறவீட்டின் தன்மை* | *கட்டணம் (ரூபா)* |
|---|---|---|
| 01 | பிடிகாசு (மாடு ஒன்றுக்கு) | 500.00 |
| 02 | தண்டப்பணம் (மாடு ஒன்றுக்கு - பிடிக்கப்பட்ட இடத்தில் கொடுக்கப்பட்டால்) | 1,000.00 |
| 03 | தண்டப்பணம் ஏற்றியிறக்கல் (மாடு ஒன்றுக்கு - அலுவலகத்திற்கு கொண்டு வரப்பட்ட பின்பு கொடுக்கப்பட்டால்) | 500.00 |
| 04 | பராமரிப்புச் செலவு (மாடு ஒன்றுக்கு நாளொன்றுக்காக) | 250.00 |

பத்து நாட்களுக்கு மேல் மாடுகள் உரிமையாளரினால் மேற்குறிப்பிட்ட கட்டணங்களைச் செலுத்தி மீளப் பெறப்படாவிட்டால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**அட்டவணை 04**

**நூலகக் கட்டண அறவீடுகள்**

| தொ. இல. | அறவீட்டின் தன்மை | கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| 01 | அங்கத்துவ விண்ணப்பப்படிவக் கட்டணம் | 15.00 |
| 02 | புதிய அங்கத்துவக் கட்டணம் (பெரியவர்) | 120.00 |
| 03 | அங்கத்துவம் புதுப்பித்தல் கட்டணம் (பெரியவர்) | 50.00 |
| 04. | புதிய அங்கத்துவக் கட்டணம் (சிறுவர்) | 50.00 |
| 05. | அங்கத்துவம் புதுப்பித்தல் கட்டணம் (சிறுவர்) | 50.00 |
| 06. | குறித்த காலத்திற்குள் ஒப்படைக்கப்படாத ஒரு புத்தகத்திற்கான தண்டப்பணம் (நாளொன்றிற்கு) | 3.00 |

அங்கத்தவர்களால் தொலைக்கப்படும் புத்தகம் ஒன்றுக்கான அறவீடு புத்தகத்தின் பெறுமதியுடன் புத்தகம் கட்டும் கூலியும் சேர்த்து அறவிடப்படும்.

**அட்டவணை 05**

**பிரதேச சபை வாகனங்களை (சாரிதியுடன்) வாடகைக்கு வழங்குவது தொடர்பான கட்டண அறவீடுகள்**

| தொ. இல. | அறவீட்டின் தன்மை | கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| 01 | மோட்டர் கிரேடர் (ஒரு மணித்தியாலத்திற்கு) | 5,060.00 |
| 02 | ஜே. சி. பி. (ஒரு மணித்தியாலத்திற்கு) | 3,600.00 |
| 03 | ரோலர் (ஒரு மணித்தியாலத்திற்கு) | 3,475.00 |
| 04 | உழவு இயந்திரம் பெட்டியுடன் - ஒரு நாளுக்கு (08 மணித்தியாலங்கள்) | 5,000.00 |
| 05 | உழவு இயந்திரம் நீர்த்தாங்கியுடன் - ஒரு நாளுக்கு (08 மணித்தியாலங்கள்) | 5,000.00 |

**அட்டவணை 06**

**பிரதேச சபை நீர்க்கொள்கலன் தாங்கிகள் வாடகைக்கு விடுவது தொடர்பான கட்டண அறவீடுகள்**

| தொ. இல. | அறவீட்டின் தன்மை | கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| 01 | 1000 L வெற்றுக் கொள்கலனுடன் கொள்கலன் தாங்கி - ஒரு நாளுக்கு | 200.00 |
| 02 | 2000 L வெற்றுக் கொள்கலனுடன் கொள்கலன் தாங்கி - ஒரு நாளுக்கு | 400.00 |

04-929/1

---

**வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை**

தேசிய சூழல் சட்டத்தின் கீழான அறிவித்தல்

வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபையினால் வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்குவதற்கு 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழற் சட்டத்தின் பிரகாரம் 1533/16 ஆம் இலக்க 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 25 ஆந் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கும் 1534/18 ஆம் இலக்க 2008 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கும் அமைவாக

'இ' பகுதியில் குறிப்பிட்ட விடயங்கள் உள்ளூர் அதிகார சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. பின்வரும் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக எமது சபையினால் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் இச்சட்டத்தை அமுல்படுத்துவதோடு கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கைத்தொழில்கள் மீது மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் குறித்துரைக்கப்பட்டவாறு படிவங்கள், கட்டணங்கள், பரீட்சித்தல் கட்டணங்கள் ஒன்றுக்கான உத்தரவுப் பத்திரக் கட்டணங்கள் ஆகியவற்றை விதித்து அறவிடப்பட வேண்டும் என்பதுடன் இதன் மூலம் அறவிடப்படும் கட்டணங்கள் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் விதித்து அறவிடப்படும் உரிமக் கட்டணங்களை விட மேலதிகமானதும் அவற்றை எவ்விதத்திலும் பாதிக்காததுமாகும். இக்கட்டணங்கள் 01.01.2022 ஆந் திகதி முதல் தொடரப்படல் வேண்டும் என 09.11.2021 ஆந் திகதிய VCKPS/2021/11/1 ஆம் இலக்க தீர்மானம் மூலம் தீர்மானிக்கப்பட்டு இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

சுப்பையா ஜெகதீஸ்வரன்,
கௌரவ தவிசாளர்,
வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை.

**அட்டவணை**

1. எல்லா வாகனங்களுக்குமான எரிபொருள் நிரப்பும் இடம் (திரவப் பெற்றோலியம், பெற்றோலிய வாயு உட்பட)
2. 10 பேர் அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்களைத் தொழிலுக்கமர்தியுள்ள மெழுகுவர்த்தி உற்பத்தி
3. 10 இற்கு மேற்பட்டவர்களும் 25 இற்கு குறைவானவர்களுமான வேலையாட்களைத் தொழிலுக்கமர்த்தியுள்ள தேங்காய் எண்ணெய் பிரித்தெடுக்கும் கைத்தொழில்கள்
4. 10 இற்கு கூடுதலானவர்களும் 25 இற்குக் குறைவானவர்களுமான வேலையாட்களைத் தொழிலுக்கமர்த்தியுள்ள மதுசாரமற்ற பான வகைகள்
5. உலர் பதனீட்டு முறைத் தொழிற்பாடுடைய அரிசி ஆலை
6. ஒரு மாதத்திற்கு 1000 கிலோ கிராமுக்கு குறைவான உற்பத்தித் திறன் கொண்ட அரைக்கும் ஆலைகள்
7. புகையிலைக் களஞ்சியங்கள்
8. தொகுதியொன்றுக்கு 500 கிலோ கிராம் அல்லது அதற்கு கூடுதலான கந்தக தூமமூட்டும் கொள்ளளவுடைய கறுவா தூமமூட்டும் கைத்தொழில்
9. உணவிற்கு பயன்படுத்தும் உப்பு சிப்பஞ் செய்தல், பதனிடுதல் கைத்தொழில்
10. உடனடித் தேனீர் தேயிலை பதனிடும் செயன்முறையற்ற ஏனைய தேயிலை தொழிற்சாலைகள்
11. கொன்கிறீட் முன்வார்ப்பு கைத்தொழில்கள்
12. பொறிமுறைப்படுத்தப்பட்ட சீமெந்துக்குற்றி தயாரிக்கும் கைத்தொழில்கள்
13. ஒரு நாளைக்கு 20 மெற்றிக் தொன்னுக்கு குறைவான உற்பத்தி திறன் கொண்ட சுண்ணாம்பு போரணை
14. 25 அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள மட்பாண்ட அல்லது பரிசுச்சாந்துக்கள் கைத்தொழில்கள்
15. எல்லா விதமான சுண்ணாம்பு சிப்பி நொறுக்கும் கைத்தொழில்கள்
16. கூரை ஓடு மற்றும் செங்கல் உற்பத்தி
17. வெடி மருந்துகளைப் பயன்படுத்தும் கம்மியர் சுரங்கத் தொழில் நடவடிக்கைகளுக்கான ஒற்றைத்துளைத் தகர்ப்புக்கள்
18. ஒரு நாளைக்கு 50 கனமீற்றருக்கு குறைவானதுமான அரியும் ஆற்றல் கொண்ட மர ஆலைகள் அல்லது மரத்தின் போரொன் செயற்படுத்தலில் அல்லது மரத்தை பருவப்படுத்துவதில் ஈடுபட்டுள்ள கைத்தொழில்கள்
19. 05 இற்கு கூடுதலான 25 இற்கு குறைவான வேலையாட்கள் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள பலநோக்குத் தச்சுப் பொறிகளை பயன்படுத்தும் தச்சு வேலைக்களங்கள் அல்லது மரத்தை மெருகூட்டும் கைத்தொழில்கள் அல்லது மர வேலைக்களங்கள்
20. 05 அல்லது அதற்கு கூடுதலான அல்லது 20 இற்கு குறைவானதுமான அறைகளைக் கொண்ட வதிவிட வசதியுடைய ஹோட்டல்கள், விருந்தினர் விடுதிகள், வாடி வீடுகள்
21. வாகனங்களைப் பழுதுபார்க்கும் செயற்பாடுகள் அல்லது பராமரித்தல் செயற்பாடுடைய கராஜ்கள்
22. குளிரூட்டி மற்றும் வளி சீராக்கி உபகரணங்களும் முறைமைகளும் பழுதுபார்த்தல், பேணல், நிறுவுதல், இணைத்து பொருத்துதல், உற்பத்தி செய்தல் ஆகிய வேலைகளை மேற்கொள்ளும் வேலைக்களங்களும் பராமரிப்பு வசதிகளும் (கராஜ்கள் உட்பட) நடமாடும் வளிச்சீராக்கிகள், போக்குவரத்துக் குளிரேற்றிகள் மற்றும் குளிரேற்றல் மீட்பு மற்றும் மீள் பயன்பாடு போன்ற சார்புடைய செயற்பாடுகள் உட்பட
23. வாகன பராமரிப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் இடங்கள் தவிர்ந்த கொல்கலன் சாலைகள்

24. 10 பேர் அல்லது அதற்கு கூடுதலான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள எல்லா விதமான மின்சார மற்றும் இலத்திரனியல் பொருட்கள் பழுதுபார்த்தல்

25. ஈயம் உருக்குதல் புறநீங்கலாக அச்சுப் பதித்தல் கூடங்களும் எழுத்து அச்சுப்பொறிகளும்.

**அட்டவணை 08**

கட்டணம் அறவிடல்

| தொ. இல. | அறவீட்டின் தன்மை | கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| **அனுமதிப்பத்திரக் கட்டணம்** | | |
| 01. | புதிய செயற்திட்டம் எனில் | 4,000.00 |
| 02. | புதுப்பித்தல் செயற்திட்டம் அனைத்திற்கும் | 4,000.00 |
| **பரிசீலனைக் கட்டணம்** | | |
| | முதலீடு ரூபா 250,000 அல்லது அதற்கு குறைவு | 3,000.00 |
| | முதலீடு ரூபா 250,001 - ரூபா 500,000 | 3,750.00 |
| | முதலீடு ரூபா 500,001 - ரூபா 1,000,000 | 5,000.00 |
| | முதலீடு ரூபா 1,000,000 இற்கு மேல் | 10,000.00 |

**படிவக் கட்டணம்**

| தொ. இல. | அறவீட்டின் தன்மை | கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| 01 | சூழல் பாதுகாப்பு உரிம விண்ணப்பப்படிவம் | 100.00 |
| 02 | சூழல் பாதுகாப்பு உரிமம் புதுப்பித்தல் படிவம் | 100.00 |

04-929/2

---

**வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை**

கட்டடம் அமைத்தலுக்கான அனுமதியும் கட்டணங்கள் விதித்தல் - 2022

பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட இடங்கள் முழுவதும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 47 தொடக்கம் 59 வரையானதுடன் சேர்த்து 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்திச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் வீடமைப்பு நிர்மாணத்துறை பொது வசதிகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதியின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்படும் கட்டிட விண்ணப்பங்கள், காணி உப பிரிவிடல்கள் மற்றும் நகர திட்டமிடல் என்பன பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்படுகின்றது.

இவ்விடயங்களுக்காக 1986.03.10 ஆந் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி இலக்கம் 329/9 இன் கீழ் உருவாக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஒழுங்கு விதிகளும் அதனைத் தொடர்ந்து வந்த திருத்தங்களுக்கும் அமைவாக மேற்கொள்ளப்படும் கட்டண அறவீடுகள் 2022.01.01 முதல் தொடரப்படல் வேண்டுமென 09.11.2021 ஆந் திகதிய VCKPS/2021/11/1 ஆம் இலக்க தீர்மானம் மூலம் தீர்மானிக்கப்பட்டது என இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

சுப்பையா ஜெகதீஸ்வரன்,
கௌரவ தவிசாளர்,
வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை.

04-929/3

## வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை

*முச்சக்கர வண்டி தரிப்பிடங்களுக்கான கட்டணம்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 146 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 148 ஆம் பிரிவின் கீழ் (1) வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபையின் VCKPS/2021/11/1 ஆம் இலக்க 09.11.2021 ஆந் திகதிய தீர்மானத்தின் பிரகாரம் வெங்கலச்செட்டிகுளம் பிரதேசத்தினுள் 2022 ஆம் ஆண்டு I ஆம் நிரலில் குறிப்பிடப்படும் தரிப்பிடங்களில் சேவை வழங்குவதற்கும் II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டிருக்கும் கட்டணங்களை 2022, தை மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் வெங்கலச் செட்டிகுளம் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் செலுத்தப்படல் வேண்டும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*சுப்பையா ஜெகதீஸ்வரன்,*
*தவிசாளர்,*
*வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை.*

### நிரல் I

### முச்சக்கர வண்டி தரிப்பிடங்கள்

1. செட்டிகுளம் பொது வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலைக்கு முன்னால் - முகத்தான்குளம் 6 உம் குறுக்குத்தெருவுக்கும் இடது பக்கத்தில் மதவாச்சி - மன்னார் பிரதான வீதியின் 10m
2. செட்டிகுளம் பிரதேச செயலக பிரதான வாயிலிருந்து 20m க்கு அப்பால் 10m
3. செட்டிகுளம் மக்கள் வங்கிக்கு முன்னால் இடதுபக்கமாக 5m
4. செட்டிகுளம் சமுர்த்தி வங்கிக்கு முன்னால் இடதுபக்கமாக 5m
5. ஆண்டியாபுளியங்குளம் - மன்னார் - மதவாச்சி பிரதான வீதிக்கு அண்மையில் 8m அளவான தூரம்
6. மாங்குளம் - மருதமடு வீதியின் சந்தியிலிருந்து 20m தூரம்
7. வீரபுரம் - நேரிய குளம் - வவுனியா பிரதான வீதியின் கப்பலேந்திய மாதா திருவுருவச்சிலை சந்தியிலிருந்து இடதுபக்கம் 10m தூரம்
8. சூடுவெந்தபுலவு - பாடசாலையின் பிரதான நுழைவாயிலுக்கு வலது பக்கமாக வவுனியா - நேரியகுளம் பிரதான வீதியின் 10m
9. முதலியார் குளம் - 3 ஆம் ஒழுங்கைக்கு இடது பக்கமாக கடைத்தொகுதிக்கு அப்பால் மதவாச்சி - மன்னார் பிரதான வீதியின் 10m
10. பிரமணாலங்குளம் - வவுனியா - மன்னார் பிரதான வீதியின் பெரியதம்பனை சந்தியிலிருந்து வலது பக்கமாக 10m

### நிரல் II

1. முச்சக்கர வண்டி தரிப்பிடக்கட்டணம் (நாள் ஒன்றிற்கு) - 10.00
2. முச்சக்கர வண்டி பதிவுக் கட்டணம் - 1500.00

04-929/4